## டிசம்பர் – 19 – புதன்

**புனித 5ம் உர்பன் - திருத்தந்தை**

**என் கடவுளே, பொல்லார் கையினின்று என்னைக் காத்தருளும்- திபா 71:4**

---

### முதல் வாசகம் : நீதிபதிகள் 13 : 2 – 7, 24 - 25

சோராவைச் சார்ந்தவரும் தாண் குலத்தவருமான ஒருவர் இருந்தார். அவர் பெயர் மனோவாகு. அவர் மனைவி மலடியாய் இருந்ததால், குழந்தை பெறவில்லை. ஆண்டவரின் தூதர் அப்பெண்ணுக்குத் தோன்றி அவரிடம், ”நீ மலடியாய் இருந்ததால் இதுவரை குழந்தை பெற்றெடுக்கவில்லை. ஆனால், இனி நீ கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். இப்பொழுது கவனமாயிரு! திராட்சை இரசமோ மதுபானமோ அருந்தாதே! தீட்டான எதையும் உண்ணாதே. ஏனெனில் நீ கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். சவரக்கத்தி அவன் தலைமீது படக்கூடாது. ஏனெனில் பையன் பிறப்பிலிருந்தே கடவுளுக்கென ”நாசீர்” ஆக இருப்பான். அவன் இஸ்ரயேல் மக்களைப் பெலிஸ்தியரின் கையிலிருந்து விடுவிக்கத் தொடங்குவான்” என்றார். அப்பெண் தம் கணவரிடம் வந்து கூறியது ”கடவுளின் மனிதர் என்னிடம் வந்தார். அவரது தோற்றம் கடவுளின் தூதரின் தோற்றம் போல் பெரிதும் அச்சத்திற்குரியதாக இருந்தது. அவர் எங்கிருந்து வந்தவர் என்று நான் அவரைக் கேட்கவில்லை. அவரும் எனக்குத் தம் பெயரை அறிவிக்கவில்லை. அவர் என்னிடம், ”இதோ! நீ கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். ஆகவே நீ திராட்சை இரசமோ மதுபானமோ அருந்தாதே. தீட்டான எதையும் உண்ணாதே. ஏனெனில் பையன் பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரை, கடவுளுக்கென நாசீராக இருப்பான்” என்றார்.” அப்பெண் ஒரு மகனைப் பெற்றெடுத்து அவனுக்குச் சிம்சோன் எனப் பெயரிட்டார். பையன் வளர்ந்து பெரியவனானான். ஆண்டவர் அவனுக்கு ஆசி வழங்கினார். சோராவுக்கும், எசுத்தாவேலுக்குமிடையே அவன் இருக்கும்போது தான் ஆண்டவரின் ஆவி அவனைத் தூண்டத் தொடங்கியது.

**பதில்பாடல் :** நாளெல்லாம் நான் பேசுவது உமது பெருமையே

### நற்செய்தி : லூக்கா 1 : 5 – 25

யூதேய நாட்டில் ஏரோது அரசனாக இருந்த காலத்தில், அபியா வகுப்பைச் சேர்ந்த செக்கரியா என்னும் பெயர் கொண்ட குரு ஒருவர் இருந்தார். அவர் மனைவி ஆரோனின் வழி வந்தவர் அவர் பெயர் எலிசபெத்து. அவர்கள் இருவரும் கடவுள் பார்வையில் நேர்மையானவர்களாய் விளங்கினார்கள். ஆண்டவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்பக் குற்றமற்றவர்களாய் நடந்து வந்தார்கள். அவர்களுக்குப் பிள்ளை இல்லை. ஏனெனில், எலிசபெத்து கருவுற இயலாதவராய் இருந்தார். மேலும் அவர்கள் வயது முதிர்ந்தவர்களாயும் இருந்தார்கள். தம்முடைய பிரிவின்முறை வந்தபோது, செக்கரியா கடவுளின் திருமுன் குருத்துவப் பணி ஆற்றி வந்தார். குருத்துவப் பணி மரபுக்கு ஏற்ப, ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டுவது யாரென்று அறியச் சீட்டுக் குலுக்கிப் போட்ட போது அது செக்கரியா பெயருக்கு விழுந்தது. அவர் தூபம் காட்டுகிற வேளையில் மக்கள் கூட்டத்தினர் அனைவரும் வெளியே இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் தூபபீடத்தின் வலப்பக்கத்தில் நின்றவாறு அவருக்குத் தோன்றினார். அவரைக்கண்டு செக்கரியா அச்சமுற்றுக் கலங்கினார். வானதூதர் அவரை நோக்கி, ”செக்கரியா, அஞ்சாதீர், உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர். நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர். அவரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர். அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார் திராட்சை மதுவோ வேறு எந்த மதுவோ அருந்தமாட்டார் தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார். அவர், இஸ்ரயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார். எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன்செல்வார் தந்தையரும் மக்களும் உளம் ஒத்துப்போகச் செய்வார் நேர்மையாளர்களின் மனநிலையைக் கீழ்ப்படியாதவர்கள் பெறச் செய்வார் இவ்வாறு ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வார்” என்றார். செக்கரியா வானதூதரிடம், ”இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன். அதுபோல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே” என்றார். அதற்கு வானதூதர் அவரிடம், ”நான் கபிரியேல் கடவுளின் திருமுன் நிற்பவன் உம்மோடு பேசவும் இந்த நற்செய்தியை உமக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டேன். இதோ பாரும், உரிய காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை. ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர் உம்மால் பேசவே இயலாது” என்றார். மக்கள் செக்கரியாவுக்காகக் காத்திருந்தனர். திருக்கோவிலில் அவர் காலந்தாழ்த்துவதைக் குறித்து அவர்கள் வியப்படைந் தார்கள். அவர் வெளியே வந்தபோது அவர்களிடம் பேச முடியாமல் இருந்தார். ஆதலால் அவர் திருக்கோவிலில் ஏதோ காட்சி கண்டிருக்க வேண்டும் என அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர் அவர்களிடம் சைகைகள் வாயிலாக உரையாடி வந்தார் பேச்சற்றே இருந்தார். அவருடைய திருப்பணிக் காலம் முடிந்ததும் அவர் வீடு திரும்பினார். அதற்குப்பின்பு அவர் மனைவி எலிசபெத்து கருவுற்று ஐந்துமாதமளவும் பிறர் கண்ணில் படாதிருந்தார். ”மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என்மீது அருள்கூர்ந்து இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்” என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

**தியானம்:** அழியா வார்த்தைகளது நற்செய்தியில் இறைமகன் இயேசுவிற்கு அடுத்ததாக திருமுழுக்கு யோவானின் பிறப்பு முக்கியமாவதனால், எல்லாம் வல்ல இறைவனின் பார்வையில் திருமுழுக்கு யோவான் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பதைப் புரிந்துகொள்கிறோம். திருமுழுக்கு யோவான் மனிதராகப் பிறந்தவர்களுள் பெரியவர் (மத்தேயு 11:11) இறைவாக்கினர்கள் தாயின் கருவில் இருக்கும்போதே தேர்ந்து கொள்ளப்பட்டாலும், திருமுழுக்கு யோவானோ தாயின் கருவில் இருக்கும்போது தூய ஆவியினால் முற்றிலுமாக ஆட்கொள்ளப்பட்டவர் (லூக்கா 1: 41). ஏனைய இறைவாக்கினர்கள் மெசியாவைக் குறித்து முன்னறிவித்தார்கள். ஆனால், திருமுழுக்கு யோவானோ ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக மக்களைத் தயாரித்து, அவர் வந்தபோது சுட்டிக்காட்டி, அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்ததனாலேயே எல்லா இறைவாக்கினர்களையும் உயர்ந்தவராக இருக்கின்றார். நற்செய்தியை நாம் ஆழமாக உற்றுநோக்கின், ஆரோனின் வழிவந்தவரனான செக்கரியா எருசலேம் திருக்கோவிலில் தூபம் காட்டுகின்ற முறை வந்தபோது ஆண்டவரின் தூதர் காட்சியளித்து “செக்கரியா அஞ்சாதீர் உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒருமகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு யோவான் எனப்பெயரிடுவீர்’’ என்கிறார். வயது முதிர்ந்த தம்பதியினருக்கு இறைவன் குழந்தைப் பேற்றை அளித்திருக்கிறார் என்பதைத் தெரிந்த பின்னும் கூட செக்கரியா நம்பாததனால் வானதூதரின் சினத்திற்கு உள்ளாகின்றார். திருமுழுக்கு யோவானின் பெற்றோர்களான செக்கரியாவும் எலிசபெத்தும் நீண்ட நாட்களாகியும் குழந்தைப்பேறு இல்லாமல் இருந்தாலும் கடவுளுடைய பார்வையில் நேர்மையுள்ளவர்களாக இருந்தார்கள் (லூக்கா 1:6) அதனால் கடவுள் அவர்கள்மீது இரக்கம்கொண்டு குழந்தைப் பேற்றினைத் தருகின்றார். இன்றைக்கு நாமும் ஒரு சாதாரண பொறுப்பில், பதவியில் இருந்துகொண்டு நாம்தான் பெரியவர்கள் என்று காட்டுகிறோம். ஆனால் திருமுழுக்கு யோவானோ மிகப்பெரிய இறைவாக்கினராக இருந்தபோதும் தாழ்ச்சியோடு இருந்தார். திருமுழுக்கு யோவானிடத்தில் இருந்த தாழ்ச்சியும் எளிமையும் எம்மிடம் இருக்கின்றதா? சிந்தித்துப் பார்ப்போம்.